


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ நவம்பர். 06, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 32 ❖ ரூ.10

### தமிழகத்தில் இன்று நடக்கவிருந்த ஆர்.எஸ்.எஸ்., பேரணி

# நிராகரிப்பு!

## கோர்ட் நிபந்தனைகளை ஏற்க மறுப்பு மேல்முறையீடு செய்ய நிர்வாகிகள் முடிவு



**சென்னை, நவ.6**

**சென்னை உயர்நீதிமன்றம், ஆர்.எஸ்.எஸ்., பேரணிக்கு பல்வேறு நிபந்தனைகள் விதித்ததால் அதை ஏற்க மறுத்து நிராகரித்த நிலையில் நிர்வாகிகள் மேல்முறையீடு செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் 44 இடங்களில் ஆர்.எஸ்.எஸ்., பேரணி நடத்த இன்று (நவ.6) அனுமதி வழங்குமாறு காவல் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் நவ.4ம் தேதி உத்தரவிட்டது. இந்த உத்தரவில், சுற்றுச்சுவர் பாதுகாப்புடன் கூடிய காலி மைதானம் அல்லது விளையாட்டு அரங்குகளில் மட்டும் பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தை நடத்த வேண்டும். அந்த இடத்துக்குச் செல்லும் வழியில் போக்குவரத்துக்கோ அல்லது மக்களுக்கோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதுஉள்ளிட்ட கட்டுப்பாடுகளை உயர்நீதிமன்றம் விதித்தது.

உயர்நீதிமன்றம் விதித்துள்ள நிபந்தனைகளுடன் ஆர்.எஸ்.எஸ்., அணிவகுப்பை கோவை, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், பல்லடம், குமரி மாவட்டம் அருமனை, நாகர்கோவில் ஆகிய 6 இடங்களை தவிர்த்து மீதமுள்ள 44இடங்களிலும் நடத்திக் கொள்ளலாம் என்று காவல்துறை சார்பில் அனுமதி அளிக்கப்பட்டது. இது தொடர்பான அறிவிப்பு அடங்கிய நோட்டீசை போலீஸ் சார்பில் ஆர்.எஸ்.எஸ்., நிர்வாகிகளிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. ஆனால் ஆர்.எஸ்.எஸ்., நிர்வாகிகள் இந்த நோட்டீசை வாங்க மறுத்ததாகவும் இதனால் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் அனுமதி தொடர்பாக நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியானது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தென் மண்டல தலைவர் வன்னியராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: அணிவகுப்பு ஊர்வலத்தை உள் அரங்கிலோ அல்லது நான்கு சுவர்களுக்குள்ளோ நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது எங்களுக்கு ஏற்புடையதல்ல. காஷ்மீர், கேரளா, மேற்கு வங்கம் போன்ற எல்லா இடங்களிலும் அணிவகுப்பு ஊர்வலங்கள் பொதுவெளியில்தான் நடக்கின்றன. நாங்கள் இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய உள்ளோம். எனவே, நவம்பர் 6ம் தேதி நடத்த இருந்த ஊர்வலத்தை நடத்தஇயலாது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



சென்னை மாநகராட்சி திரு.வி.க நகர் மண்டலத்தில் 64 முதல் 78 வரை உள்ள வார்டுகளில் பருவமழையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக மாமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மகேஷ் குமார், அரசு முதன்மை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, குடிநீர் வழங்கள் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய மேலாண்மை இயக்குனர் கிர்லோஸ் குமார், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார் மற்றும் அரசு அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஆலங்குடியில் இந்தி திணிப்பு எதிர்ப்பு தீர்மான விளக்க பொதுக்கூட்டம்




ஆலங்குடி. நவ, -06

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் தெற்கு மாவட்ட தி.மு.க., சார்பில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் தங்கமணி வவேற்றார். தெற்கு மாவட்ட செயலாளர் சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் முன்னிலை வகித்தார். செய்தி மக்கள் தொடர்பு துணை செயலாளர் ராஜீவ் காந்தி, தலைமை பேச்சாளர் முரசொலிமூர்த்தி ஆகியோர் இந்தி திணிப்பு எதிர்ப்பு தீர்மானங்களை விளக்கி பேசினர்.

கூட்டத்தில், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானாந்தம், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் சிவகுமார், கிழக்கு ஒன்றிய செயலாளர் ரவி, மேற்கு ஒன்றிய செயலாளர் அரு.வடிவேல், அரசு வழக்கறிஞர் கணேசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சி கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர பொருப்பாளர்கள் கலந்துகொண்டனர். முடிவில் நகர செயலாளர் பழனிகுமார் நன்றி கூறினார்.

### புதுகை அருகே ரைஸ் மில்லால் கிராம மக்கள் அவதி

## அதிகாரிகள், அமைச்சர் வரை மனு வழங்கியும் பலனில்லை



புதுக்கோட்டை. நவ.6

புதுக்கோட்டை அருகே சர்ச்சைக்குரிய மாடர்ன் ரைஸ் மில்லால் அவதிப்படும் கிராம மக்கள் ஊராட்சி மன்ற தலைவர் முதல் அமைச்சர் வரை மனு அளித்தும் போதிய நடவடிக்கை இல்லை என்று அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பாக மக்கள் அதிகாரிகள், அமைச்சர் வரை அவர்கள் கொடுத்துள்ள மனு விபரம் வருமாறு:

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுக்கா வல்லத்திராக்கோட்டை கிராமத்தில் சேகர் என்பவர் மார்டன் ரைஸ்மில் இயக்கி வருகிறார். மில் அருகிலுள்ள குடியிருப்பு பகுதியில் ரைஸ்மில்லால் ஏற்படும் அறவை தூசிகள் மற்றும் சாம்பல் துகள்கள் அதிகளவில் கிளம்புவதால் அசுத்தம் ஏற்பட்டு வருகிறது. கைக்குழந்தைகள் மற்றும் வீட்டில் உள்ள பொருட்கள் மீதும் சாம்பல் படிந்து வருகிறது.

மேலும், கழிவுநீரால் துர்நாற்றம் ஏற்படுகிறது. அரவை சப்தம் 24 மணி நேரமும் ஏற்படுவதால் பள்ளிக் குழந்தைகள் படிக்க முடியாமலும், தூங்க முடியாமலும் தவிக்கின்றனர். மில் உரிமையாளர்களிடம் மக்கள் பலமுறை சொல்லி மாசு ஏற்படாத வகையில் அரவை செய்ய வலியுறுத்தியும் அவர் செய்யவில்லை. இது தொடர்பாக ஊராட்சி மன்ற தலைவர், தாசில்தார், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கலெக்டர் என மனுக்கள் அளித்தும் நடவடிக்கை இல்லை. மக்கள் நலன்கருதி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வல்லத்திராக்கோட்டை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வல்லத்திராக் கோட்டையைச் சேர்ந்த அருணாசலம், விஸ்வநாதன், கந்தசாமி, வரதராஜன், அரங்குளவன், சுப்பிரமணியன் தெரிவித்ததாவது: இந்த ரைஸ் மில்லால் புகை, இரைச்சல், உமிபரவுதல், கரும்புகை, சுகாதார சீர்கேடு, ஆலையிலிருந்து கழிவுநீர் செல்ல வழியில்லை. ஆரம்ப சுகாதார நிலையம், வங்கி, அரசு துவக்கப்பள்ளி உள்ளது. இந்த ரைஸ் மில்லால் அனைவரும் பாதிக்கின்றனர். ஆகவே, அதிகாரிகள் இந்த ரைஸ் மில்லை ஆய்வு செய்து உடனடியாக மூட நடடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து சர்ச்சைக்குரிய ரைஸ் மில் நடத்தி வரும் சேகர் என்பவரின் மொபைல் எண்ணில் (9488229377) தொடர்பு கொண்டு புதுகைவரலாறு சார்பில் விளக்கம் கேட்ட போது, ஃபோனை எடுத்தவர் தான் அவருடைய தம்பி என்றும் அண்ணன் இல்லை. வந்ததும் பேசச் சொல்கிறேன் என்று தெரிவித்து விட்டு இணைப்பை துண்டித்து விட்டார்.

வல்லத்திராக் கோட்டையில் இயங்கி வரும் ரைஸ் மில்லால் அப்பாவி மக்கள் பாதிக்காத வகையில் அரசு அதிகாரிகளும், மாவட்ட நிர்வாகமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## மழைநாள் விடுமுறையை ஈடுசெய்ய சனிக்கிழமைகளிலும் வகுப்புகள்: அமைச்சர் அன்பில் மகேஷ் தகவல்



சென்னை . நவ.6

மழைநாள் விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் சனிக்கிழமைகளில் வகுப்புகள் நடைபெறும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் வரும் ஜனவரி மாதம் 16,17,18 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள பன்னாட்டு புத்தக கண்காட்சிக்கான இலச்சினையை (முத்திரையை) மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், இந்த பன்னாட்டு புத்தக கண்காட்சி மூலம் தமிழர்களின் கலை படைப்புகள் உலகளவில் செல்வாக்கு பெறும் நிலை உருவாகும் என்று தெரிவித்தார்.

மேலும், பள்ளி விடுமுறை குறித்த கேள்விக்குப் பதிலளித்த அவர், " கடந்த ஆண்டுகளைப் போல் இந்த கல்வியாண்டில் பாடத்திட்டம் குறைக்கப்பட வில்லை. பாடங்களை முழுமையாக நடத்த வேண்டிய கடமை உள்ளது. முன்னதாக, தீபவாளிக்கு அடுத்த நாள் விடுமுறை அறிவிக்கப்பட்டது. அந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் வரும் 19ம் தேதி வரும் சனிக்கிழமை வார விடுமுறைக்கு பதிலாக பணி நாளாக நடைபெறும் என்று தெரிவித்தார்.

அதேபோன்று, மாநிலத்தின் பெய்த தொடர்மழை காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட ஆட்சியர்கள் விடுமுறை அறிவித்து வருகின்றனர். இந்த மழைநாள் விடுமுறை நாட்களை ஈடு செய்ய தேவை ஏற்பட்டால் நிச்சயமாக பரிசீலக்கப்படும். சனிக்கிழமை வார விடுமுறை நாட்கள் பணி நாளாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## சினிமாவில் நடிக்க வைப்பதாக கூறி மாணவியை வன்கொடுமை செய்த தயாரிப்பாளர் – பொள்ளாச்சியில் மீண்டும் பகீர் சம்பவம்!

பொள்ளாச்சி . நவ.6

பொள்ளாச்சியில் சினிமாவில் கதாநாயகியாக நடிக்க வைப்பதாக கூறி கல்லூரி மாணவியை வன்கொடுமை செய்த வழக்கில் தலைமறைவாக இருந்த தயாரிப்பாளரை போலீசார் கைது செய்தனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில், சென்னையை சேர்ந்த கல்லூரி மாணவி ஒரு புகார் அளித்திருந்தார். அதில், தனக்கு சிறு வயதில் இருந்தே நடிக்க ஆசை என்றும், கோவையில் கல்லூரி படித்து கொண்டிருந்த போது, கதாநாயகியாக நடிக்க வாய்ப்பளிப்பதாக வெளிவந்த விளம்பரத்தை கண்டு அந்த நம்பரை தொடர்பு கொண்டதாக தெரிவித்தார்.

இதையடுத்து, பொள்ளாச்சி மகாலிங்கபுரத்தில் உள்ள விடுதியில் நடிகைகள் தேர்வு நடைபெறுவதை அறிந்து கொண்ட அவரும், அங்கே சென்றுள்ளார். விடுதியில் கரூரை சேர்ந்த பார்த்திபன் (30) என்பவர் தன்னை தயாரிப்பாளராக அறிமுகம் செய்து கொண்டு மாணவியிடம் ஆசை வார்த்தை கூறியுள்ளார். பின்னர் குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து அவரை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

இது குறித்து மயக்கம் தெளிந்த பின் மாணவி கேட்டதற்கு திருமணம் செய்து கொள்வதாக கதாநாயகியாக நடிக்க வைப்பதாகவும் ஆசைவார்த்தை கூறி பல முறை வன்கொடுமை செய்துள்ளார். சினிமா மீது உள்ள ஆசையால் மாணவியும் அவரது பேச்சுக்கு உடன்பட்டுள்ளார்.


ஒரு கட்டத்திற்கு மேல் தயாரிப்பாளர் ஏமாற்றுவதை உணர்ந்த மாணவி காவல் நிலையத்தில் இது குறித்து புகார் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, மாணவியின் புகார் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், தயாரிப்பாளரை தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில், கோவையில் உள்ள ஓர் வீட்டில் பதுங்கியிருந்த தயாரிப்பாளரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,717 | Rs.5,119 |


# குஜராத் பாலம் விபத்தில் உயிரிழந்தோரில் 55 பேர் குழந்தைகள்:- அறிக்கையில் அதிர்ச்சி தகவல்

மோர்பி, நவ.6

குஜராத்தில் பாலம் இடிந்து விழுந்து பலியானவர்களில் 55 பேர் சிறுவர், சிறுமியர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

குஜராத் மாநிலம் மோர்பியில் பாலம் இடிந்து விழுந்ததில் 135 பேர் பலியாகினர். மோர்பியில் உள்ள ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட தொங்கு பாலம் கடந்த ஞாயிறு இரவு இடிந்து விழுந்து பெரும் உயிர் சேதம் ஏற்பட்டது. இந்த விபத்து தொடர்பாக, குஜராத்தைச் சேர்ந்த ஓரேவா நிறுவனம் பாதுகாப்பு விதிகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஓரேவா நிறுவனத்தின் அதிகாரிகள் உள்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், விபத்தில் உயிரிழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் இறுதிப் பட்டியலை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டது. அதன்படி, பாலம் இடிந்து விழுந்ததில் 39 சிறுவர்களும் 16 சிறுமிகளும் உயிரிழந்தனர் என்று அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோர்பியில் பாலம் இடிந்து விழுந்ததில் பலியான 135 பேரில் 55 பேர் குழந்தைகள் மற்றும் இறந்தவர்களில் 100 பேர் மோர்பி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதில், 18 மாத பச்சிளங்குழந்தை தொடங்கி 17 வயதுடைய சிறார்கள் வரை பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 18 வயதுடைய சிறார்கள் 8 பேர் உயிரிழந்தனர். இவ்விபத்தில் 45 ஆண்களும் 35 பெண்களும் உயிரிழந்தனர் என்று அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்டா மாவட்டங்களில் இன்று கனமழை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை . நவ,6



டெல்டா மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் இன்று (ஞாயிறு) கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை: இலங்கை கடற்கரையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் வரும் 9-ம் தேதி ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது தமிழகம் மற்றும் புதுச்சேரி கடற்கரையை நோக்கி வட மேற்கு திசையில் அடுத்த 48 மணி நேரத்தில் நகரக்கூடும்.

குமரிக் கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (6ம் தேதி) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி செட்டிகுளத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் பணிகளை சுற்றுச்சூழல், விளையாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது ஒன்றிய செயலாளர் தங்கமணி, பேரூராட்சி மன்ற தலைவர் ராசி முருகானாந்தம், நகர செயலாளர் பழனிக்குமார், பேரூராட்சி கவுன்சிலர்கள் உடனிருந்தனர்.




# மும்பை எக்ஸ்பிரஸ் ரெயிலில் தீ விபத்து: உயிர்தப்பிய பயணிகள்

கொல்கத்தா, நவ.6

மேற்கு வங்கம், மும்பை எக்ஸ்பிரஸ் ரெயிலில் தீ விபத்து ஏற்பட்டது. தீ உரிய நேரத்தில் அணைக்கப் பட்டதால் பயணிகள் உயிர் தப்பினர்.

மேற்குவங்க மாநிலம் சாலிமாரில் இருந்து மும்பையில் உள்ள லோக்மான்யா திலக் டெர்மினசுக்கு (எல்.டி.டி.,) எக்ஸ்பிரஸ் ரெயில் வந்து கொண்டு இருந்தது. இந்த ரெயில் நேற்று காலை 8.43 மணிக்கு நாசிக் ரோடு ரெயில் நிலையத்தில் நின்று கொண்டு இருந்தது. அப்போது திடீரென ரெயிலின் பார்சல் வேன் பெட்டியில் திடீரென தீப்பிடித்தது. தகவலறிந்த தீயணைப்பு துறையினர் விரைந்துசென்று 45 நிமிடத்தில் தீயை அணைத்தனர். பார்சல் பெட்டியில் எரிந்த தீ உரிய நேரத்தில் அணைக்கப் பட்டதால் பயணிகள் உயிர் தப்பினர்.

# டெல்லியில் டீசல் லாரிகளுக்கு தடை

புதுடெல்லி. நவ,6



டெல்லியில் காற்று மாசு அதிகரித்து வருவது அம்மாநில மக்களுக்கு நாளுக்கு நாள் கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இதன் காரணமாக டெல்லியில் டீஸல் லாரிகள் இயங்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

டெல்லியின் அண்டை மாநிலமான பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் விவசாயிகள் விவசாய கழிவுகளை தொடர்ந்து எரித்து வருவதால் இந்த காற்று மாசு உருவாகி வருகிறது. இதையடுத்து தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு உள்ளன. அரசு அலுவலகங்களில் 50 சதவீத ஊழியர்கள் வீட்டில் இருந்தபடி பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. காற்று மாசு அதிகரித்து வருவதை கட்டுப்படுத்த டெல்லி நகருக்குள் டீசல் லாரிகள் இயங்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. அத்தியாவசிய பொருட்கள் ஏற்றி வரும் லாரிகளுக்கு மட்டும் விதி விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. கியாஸ் மற்றும் மின்சார வாகனங்கள் அனுமதிக்கப்படுகிறது.

# கந்தர்வக்கோட்டையில் நகை, பணம் திருட்டு

கந்தர்வகோட்டை, நவ-.6

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ராஜகோபால் நகரில் வசித்து வருபவர் முருகேசன் (45). கடந்த 3ம் தேதி தனது மகளுடன் வீட்டை பூட்டி விட்டு தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

4ம் தேதி வீடு பூட்டு உடைக்கப்பட்டதை அறிந்த உறவினர்கள் நகை, பணம் திருடப்பட்டு இருக்கும் என்று கந்தர்வகோட்டை காவல்துறையினருக்கும், வீட்டு உரிமையாளருக்கும் தகவல் கொடுத்தனர்.

மருத்துவமனையில் இருந்த முருகேசன் வீட்டிற்கு வந்து பார்த்தபோது 17 பவுன் நகை, ஒரு லட்சம் பணம் திருடப்பட்டுள்ளது என்று கூறினார். இச்சம்பவம் குறித்து கந்தர்வகோட்டை காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

# பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,500 இமாச்சல பிரதேசத்தில் காங்., வாக்குறுதி

சிம்லா. நவ,6



இமாச்சலப் பிரதேசத்தில் பெண்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1,500 வழங்கப்படும் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளுடன் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இமாச்சலப் பிரதேச சட்டப்பேரவைக்கு இம்மாதம் 12ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. மாநிலத்தில் தேர்தலைச் சந்திக்க அரசியல் கட்சிகள் தீவிரமாக தயாராகி வருகின்றன. இந்நிலையில், காங்கிரஸ் கட்சி தங்களது வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையை நேற்று (நவ.5) சிம்லாவில் உள்ள மாநில கட்சித் தலைமை அலுவலகத்தில் வெளியிட்டது.

இதுகுறித்து காங்கிரஸ் தேர்தல் அறிக்கை குழுவின் தலைவர் தானி ராம் சண்டில் நிருபர்களிடம் கூறுகையில், “இமாச்சலப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற தொடர்ந்து பாடுபடும். எங்களுக்கு தேவை, மக்களின் ஆதரவும், நம்பிக்கையும் மட்டுமே. 5 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, பெண்களுக்கு ரூ.1,500 மாதந்திர உதவித்தொகை, மக்களுக்கு 300 யூனிட் இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளோம்,” என்றார்.

# புதிய சாலை வசதி வேண்டும் நகரசபை கூட்டத்தில் கோரிக்கை

அறந்தாங்கி, நவ.6



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி நகராட்சிக்கு உட்பட்ட 12வது வார்டில் நகர சபை கூட்டம் நகராட்சி தலைவர் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் வளையல்காரத்தெரு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பக்கவாட்டில் உள்ள சாலையில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைப்பதோடு பழுதடைந்த சாலை சரி செய்து புதிதாக சாலை வசதி அமைக்க வேண்டும். நகராட்சிக்கு சொந்தமான வளையல்காரத்தெருவில் உள்ள பழைய சாலையை அளவிட்டு புதிதாக சாலை அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர். நகர சபா கூட்டத்தில் 12வது வார்டு உறுப்பினர் விஸ்வமூர்த்தி, நகராட்சி துணைத் தலைவர் முத்து, தி.மு.க., பொதுக்குழு உறுப்பினர் கலைமணி, நகராட்சி 12வது வார்டு பொதுமக்கள் பலலர் பங்கேற்றனர்.

# மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டெல்லி முதல்வர் மீது விமர்சனம்

புதுடெல்லி. நவ,6




டெல்லியில் நிலவும் காற்று மாசினை போக்க முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அவரது கவனம் முழுவதும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள இமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத்தில் இலவசங்களை அறிவிப்பதில்தான் இருக்கிறது என்றும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா விமர்சனம் செய்துள்ளார்.

இதுகுறித்து மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது:

டெல்லியில் உள்ள மக்கள் உடனடியாக முகக்கவசம் அணிந்து காற்று மாசிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அரவிந்த் கெஜ்ரிவால், இமச்சலப் பிரதேசம், குஜராத் தேர்தல் தொடர்பாக இலவசங்களை அறிவிப்பதிலும், டெல்லியிலுள்ள வரிசெலுத்துவோரின் பணத்தில் விளம்பரம் செய்வதிலுமே தீவிரமாக உள்ளார். இவ்வாறு மத்திய அமைச்சர் விமர்சனம் செய்துள்ளார்.

# அரியலூர் நகராட்சியில் 2வது நாளாக பகுதிசபா கூட்டம்



அரியலூர், நவ.5

அரியலூர் நகராட்சிவார்டு பகுதிகளில் இரண்டாவது நாள் பகுதி சபா கூட்டங்கள் நடந்தது.

அரியலூர் நகராட்சிக்குட்பட்ட 13- வதுவார்டு, தெற்கு திரௌபதி அம்மன் கோவில் வளாகத்தில் நடந்த, பகுதி சபா கூட்டத்துக்கு, நகராட்சி ஆணையர் சித்ராசோனியா தலைமை வகித்தார். கவுன்சிலர் வெங்கடாஜலபதி வரவேற்றார். நகராட்சி பொறியாளர் தமயந்தி, சுகாதார ஆய்வாளர் தர்மராஜ், செந்தில்குமார், அருண் கலைவாணன் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், 13-வது வார்டில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, கவுன்சிலர் வெங்கடாஜலபதி, நகராட்சி ஆணையரிடம் கோரிக்கை மனு அளித்தார்.

அதைத்தொடர்ந்து அரியலூர் நகராட்சி 8-வது வார்டில் நடைபெற்ற கூட்டத்தில் கவுன்சிலர் ராஜேந்திரன், 17- வது வார்டில் நடைபெற்ற கூட்டத்தில் கவுன்சிலர் ஜீவாசெந்தில், 10-வது வார்டு சிங்காரதெருவில் நடைபெற்ற கூட்டத்தில் கவுன்சிலர் இன்பவல்லிமாரியப்பன், 1-வது வார்டு சந்தனமாதா கோவில் தெருவில் நடைபெற்ற கூட்டத்தில் கவுன்சிலர் யேசுமேரிலீனஸ், 3-வது வார்டில் நடைபெற்ற கூட்டத்தில் கவுன்சிலர் சத்தியன், 7-வது வார்டில் நடைபெற்ற கூட்டத்தில் நகராட்சி துணைத்தலைவர் கலியமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பொதுமக்கள் தனது பகுதி குறைகள்குறித்து தெரிவித்தனர். அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் சித்ராசோனியா தெரிவித்தார்.

# தே.மு.தி.க., மா.செ., பிறந்தநாள் விழா

அரியலூர், நவ.6

அரியலூரில் தே.மு.தி.க., மாவட்டசெயலாளர் ராமஜெயவேல் பிறந்தநாள் விழாவின் போது கட்சியினர் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர்.

தேசிய முற்போக்கு திராவிட கழக அரியலூர் மாவட்ட செயலாளர் ராமஜெயவேல் தனது பிறந்தநாள் விழாவை, அரியலூர் பெரியார்நகரில் உள்ள அவரது வீட்டில், கேக்வெட்டி, குடும்பத்தினருடன் எளிமையாக கொண்டாடினார்.

அதைத்தொடர்ந்து தே.மு.தி.க., நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட கட்சியினர் பலரும், அவரது வீட்டுக்குச் சென்று சால்வை அணிவித்து, பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

# உளுந்தூர்பேட்டையில் மனிதம் விருது வழங்கும் விழா

கள்ளக்குறிச்சி,நவ,06_




கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் தனியார் திருமண மண்டபத்தில் மனிதம் காப்போம் அமைப்பு மற்றும் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை இணைந்து ரத்ததான முகாம் மற்றும் மனிதம் காப்போம் குழுவில் சிறப்பாக பணியாற்றி ஏழை, எளிய மக்களுக்கு ரத்ததான உதவிகள் செய்த தன்ஆர்வலர்களை கௌரவிக்கும் வகையில், மனிதம் விருது வழங்கும் விழா நடந்தது.

விழாவை உளுந்தூர்பேட்டை ஸ்ரீ சாரதா ஆசிரம அம்பாள் குத்துவிளக்குஏற்றிதுவக்கி வைத்தார். விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் அசோக்குமார் முன்னிலை வகித்தார். புதுச்சேரி புவி பவுண்டேஷன் தேசிய ரத்ததான ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணகுமார், அறம் அறக்கட்டளை நிஷா, அன்னை காருண்யா அறக்கட்டளை சௌபாக்கியம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றனர். நகர மன்ற துணைத் தலைவர் வைத்தியநாதன் தலைமை வகித்து விருதுகளை வழங்கினார்.

நேற்று நடந்த ரத்ததான முகாமில் 30 தன்னார்வலர்கள் ரத்த தானம் வழங்கினர். இவ்விழாவில் குருதிக்கொடை வழங்கிக் கொண்டிருக்கும் 90 தன்னார்வலர்களுக்கு மனிதம் விருது வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை விஜய்செல்வா, சந்துரு, குமார், அஜய்குமார், முத்துக்குமார், கோவிந்தன் ஆகியோர் செய்திருந்தனர்.

# பெரியபாளையத்தில் தமிழ்நாடு பட்டதாரி-முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் முப்பெரும் விழா



ஊத்துக்கோட்டை, நவ6-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு பட்டதாரி-முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் சிறந்த தேர்ச்சியை வழங்கிய பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும், பணி ஓய்வு பெற்ற சங்கப் பொறுப்பாளர்களுக்கும் விருது வழங்கி சிறப்பிக்கும் முப்பெரும் விழா நிகழ்ச்சி ஊத்துக்கோட்டை வட்ட கழகம் சார்பில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, ஊத்துக்கோட்டை வட்டத் தலைவர் ஸ்டாலின் தலைமை தாங்கினார். வட்ட பொறுப்பாளர்கள் மணி, ராஜசேகர்,நாகராஜ், கிருஷ்ணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில்,மாநிலச் செயலாளர் நரசிம்மன்,மாவட்ட தலைவர் ஷேக்கபூர்,மாவட்ட செயலாளர் தாஸ்,மாவட்ட அமைப்பு செயலாளர் வேல்முருகன், மாவட்ட பொருளாளர் சுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதில்,சிறப்பு அழைப்பாளராக கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களையும், நிர்வாகிகளையும் வாழ்த்தி பேசினார்.இந்நிகழ்ச்சியில், பி.ஜே.மூர்த்தி, ஆ. சத்தியவேலு, தலைமை ஆசிரியர்கள் கோவிந்தராஜ், செல்வகணேசன்,தியாகு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் வட்டச் செயலாளர் முகமது பிலால் வரவேற்றார்.முடிவில், முத்து நன்றி கூறினார்.

# சென்னை அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வீழ்த்தியது



கொல்கத்தா,நவ,6

11 அணிகள் இடையிலான 9-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் கொல்கத்தாவில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற லீக் ஆட்டத்தில் 2 முறை சாம்பியனான சென்னையின் எப்.சி ஈஸ்ட் பெங்காலை எதிர்கொண்டது.

இந்த போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்காத நிலையில் 2-வது பாதியில் சென்னை வீரர் வாபா ஹகாமென்ஷி (69-வது நிமிடம்) கோல் அடித்தார். அதன் பிறகு இரு அணி வீரர்களும் கோல் அடிக்காத நிலையில் சென்னை அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இதன் மூலம் இந்த தொடரில் 2-வது வெற்றியை பதிவு செய்த சென்னை அணி 7 புள்ளிகளுடன் புள்ளி பட்டியலில் 5-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. சென்னையின் எப்சி அணியின் அடுத்த போட்டி மும்பை சிட்டி எப்சியுடன் சென்னை நேரு ஸ்டேடியத்தில் வருகின்ற 12ஆம் தேதி நடைபெற உள்ளது

# சென்னையில் மழை நீர் தேங்கிய இடங்களில் பணிகள் நடைபெறுவது குறித்து அமைச்சர் மற்றும் எம்பி மாநகர மேயர் ஆய்வு



சென்னை, நவ,6

கடந்த திங்கட்கிழமை தொடங்கிய வடகிழக்கு பருவமழையின் தீவிரத்தினால் கனமழை பெய்தது.

இதனைத் தொடர்ந்து தண்டையார்பேட்டை வ.உ.சி நகர், திருவள்ளுவர் நகர் குடியிருப்பு, செல்லியம்மன் நகர் பகுதிகளில் மழை நீர் குளம் போல் தேங்கியது. இதை அடுத்து மாநகராட்சி ஊழியர்கள் மின் மோட்டார்கள் கொண்டு தண்ணீரை துரிதமாக அகற்றி அனைத்து இடங்களிலும் தண்ணீர் வற்ற செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மழை நீர் தேங்கிய இடங்களை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பிகே சேகர்பாபு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி விராசாமி சென்னை மாநகர மேயர் பிரியா மண்டல குழுத் தலைவர் நேதாஜி கணேசன் ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே. ஜே. எபினேசர் சென்னை மாநகராட்சி வடக்கு மண்டல ஆணையர் சிவக்குரு பிரபாகரன் உள்ளிட்டோர் ஆய்வு மேற்கொண்டனர்.

தண்டையார்பேட்டையில் மழை நீர் தேங்கிய செல்லியம்மன் நகர், வ.உ.சி. நகர், திருவள்ளூர் நகர் குடியிருப்பு பகுதிகளை ஆய்வு மேற்கொண்டு பணிகள் எவ்வாறு நடைபெறுகிறது. நீர் முழுவதும் அகற்றப்பட்டதா என்பதை குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டனர்

# அமைச்சர் வருகையால் புதுப்பாளையம்-அஞ்சாத்தம்மன் கோவில் சாலை அகலமானது: ரூ.20 கோடியில் மேம்பாலம் கட்ட அமைச்சர் உத்தரவிட்டார்



ஊத்துக்கோட்டை, நவ6-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், புதுப்பாளையத்தில் இருந்து எல்லாபுரம் ஒன்றியம் அஞ்சாத்தம்மன் கோவில் பஸ் நிறுத்தம் அருகே வர ஆரணி ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்று உள்ளது. கடந்த சில நாட்களாக பெய்த வடகிழக்கு பருவமழையால் பாலேஸ்வரம் அணைக்கட்டு நிரம்பி தண்ணீர் பாய்ந்து வந்ததால் இந்தத்தரைபாலம் நீரில் மூழ்கியது.

இந்நிலையில்,இந்தத் தரைப்பாலத்தை ஆய்வு செய்ய ஏற்று மதியம் தமிழக பால்வளத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரி மற்றும் நெடுஞ்சாலைதுறை அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள்,வருவாய் துறை அதிகாரிகள் வந்திருந்தனர்.

இந்நிலையில், புதுப்பாளையம்-அஞ்சாத்தம்மன் கோவில் நெடுஞ்சாலையின் இருபுறமும் முட்புதர் வளர்ந்து ஒத்தையடி சாலையாக காணப்பட்டது. இதனை நேற்று காலை முதல் மதியம் வரை அதிகாரிகள் ஜேசிபி இயந்திரம் மூலம் அகலப்படுத்தினர். சாலையில் இருபுறமும் முட்புதர்கள் அகற்றப்பட்டு அகலமானதை கண்டு கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில், தரைப்பாலத்தை ஆய்வு செய்த அமைச்சர் இப்பகுதியில் ரூ.20 கோடி மதிப்பில் இரண்டு ஆண்டுகளில் உயர் மட்ட மேம்பாலம் ஒன்று கட்டி தரப்படும் என கிராம மக்களிடம் உறுதி கூறினார். இந்நிகழ்ச்சியின்போது திமுகவின் முக்கிய பிரமுகர்களும்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் உடன் இருந்தனர்.



▶ வேலூர் மாவட்டத்தில் தலைமைக் காவலர்களிலிருந்து சிறப்பு உதவி ஆய்வாளராக பதவி உயர்வு பெற்ற 38 காவலர்களை வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ராஜேஸ் கண்ணன், நேரில் அழைத்து வாழ்த்துகளை தெரிவித்து சிறப்பான பணி மேற்கொள்ளும் வகையில் அறிவுரை கூறினார். உடன் வேலூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திருநாவுக்கரசு கலந்துகொண்டு வாழ்த்து தெரிவித்து ஊக்குவித்தார்.



▶ மயிலாடுதுறை மாவட்டம், வைத்தீஸ்வரன்கோயிலுக்கு மணிப்பூர் மாநில ஆளுநரும், மேற்கு வங்க மாநில பொறுப்பு ஆளுநருமான இல.கணேசன் வருகை தந்தபோது மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா புத்தகம் கொடுத்து வரவேற்றபோது எடுத்தப்படம். அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா உடன் உள்ளார்.



▶ வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கழிஞ்சூர் பேரூராட்சி கோபாலபுரம் 11வது தெருவில் சாலை வசதி, போதிய குடிநீர் வசதி, சிறிதளவு மழைக்கே சேரும் சகதியுமாகும் அவலம், கருவேல மர முட்புதரால் வீடுகளில் புகும் விஷ பாம்புகள், பூச்சிகள் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை



▶ மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் தர்மபுரம் மாநிலத்திற்கு சொந்தமான வைத்தியநாத சுவாமி திருக்கோவில் உள்ளது. இந்த கோவிலில் வைத்தியநாத சுவாமி, தையல்நாயகி அம்மன், அங்காரகன் (செவ்வாய்), தன்வந்திரி, விநாயகர், செல்வ முத்து குமாரசாமி ஆகியோர் தனி சன்னதியில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர். இந்த கோவிலுக்கு தினமும் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து ஏராளமானோர் நேரில் வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம். இந்நிலையில் இந்த கோவிலுக்கு மணிப்பூர் ஆளுநரும், மேற்கு வங்காளம் (பொறுப்பு) ஆளுநருமான இல. கணேசன் மற்றும் அவரது சகோதரர் இல. கோபாலன் குடும்பத்தினர் நேற்று வைத்தீஸ்வரன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்தார். அவருக்கு மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் லலிதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா, தர்மபுரம் ஆதீனம் சார்பில் திருநாவுக்கரசு தம்பிரான் கட்டளை ஆகியோர்கள் சிறப்பான வரவேற்பு வழங்கினார். தொடர்ந்து வைத்தியநாத சுவாமி, தையல்நாயகி அம்மன், அலங்காரகன்,( செவ்வாய்), தன்வந்திரி, விநாயகர், செல்வ முத்துக்குமாரசாமி ஆகிய சந்ததிகளில் குடும்பத்தோடு சிறப்பு வழிபாடு செய்தார். பாதுகாப்பு ஏற்பாடுகளை சீர்காழி போலீஸ் துணை சூப்பிரண்டு லாமேக் தலைமையில் ஏராளமான போலீசார் ஈடுபட்டனர்.

## குத்தாலத்தில் உள்ள கடைகளில்

# பொதுசுகாதாரத்துறை சார்பில் பொருட்கள் குறித்து சோதனை



குத்தாலம், நவ.06:-

மயிலாடுதுறை மாவட்டம்,குத்தாலம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான தேரடி,அஞ்சாறுவார்த்தலை பகுதிகளில் உள்ள கடைகளில் மாவட்ட ஆட்சியர் மற்றும் சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர் ஆகியோரின் உத்தரவின்படி நேற்று சோதனை நடைபெற்றது.

இதில் புகையிலைப் பொருட்களை கண்டுபிடித்து அழிக்கப்பட்டு, அக்கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மேலும்,கடைகளில் விற்பனை செய்யப்படும் உப்புகளில் அயோடின் உள்ளதா? என ஆய்வு செய்யப்பட்டது. அயோடின் உப்பு இல்லாத உப்பு பாக்கெட்டுகளையும் கண்டறிந்து அழிக்கப்பட்டதோடு, இனிமேல் அயோடின் உப்பு மட்டுமே பயன்படுத்த கடைகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும்,கடைகளில் புகைப்பிடிக்கத்தடை செய்யப்பட்டபகுதிஎன்றபோர்டு வைக்காத கடைகளுக்கும் அபராதம் விதித்ததோடு, அவ்வாறு போர்டு இல்லாத கடைகளில் உடன் வைத்திட அறிவுறுத்தப்பட்டது.

பள்ளிகளிலிருந்து 100 மீட்டர் தூரத்திற்குள் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வது புகையிலை தடுப்புச் சட்டம் - 2003 விதிகளை மீறிய செயல் என எச்சரிக்கை செய்து, அப்பொருட்களை அப்புறப்படுத்தியதோடு,அக்கடைகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. 18 வயதுக்கு உட்பட்டவர்கள் புகையிலை பொருட்களை விற்பனை செய்வதும் தண்டனைக்குரிய குற்றம் என்பதால் அவற்றையும் கண்டறிந்து அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் வசூலிக்கப்பட்ட தண்டத்தொகை அரசின் கணக்கில் செலுத்தப்பட்டது. இந்த ஆய்வானது குத்தாலம் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் அமிர்தகுமார் தலைமையில் நடைபெற்றது.அப்போது சுகாதார ஆய்வாளர்கள் சந்திரசேகர்,முருகேசன்,முரளி,பிரித்விராஜ், முருகன், செல்வவிக்னேஷ், சீலன்,கணேஷ்கர் மற்றும் காவலர் மீராதலைமையிலான காவல்துறையினர் ஆகியோரால் சோதனை செய்யப்பட்டது.

## சென்னை திருவொற்றியூரில் மருத்துவ முகாமை

# மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் தொடங்கி வைத்தார்



சென்னை , நவ,6

சென்னை திருவொற்றியூர் மாநகராட்சி ஒன்றாது மண்டலத்துக்குட்பட்ட 14 வார்டுகளிலும்மழைக்கால மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது திருவெற்றியூர் 10 வார்டுக்கு உட்பட்ட கோமாதா நகர் பகுதியில் நடைபெற்று வருகிறது.

இதில் 10வது வார்டு மாமன்ற உறுப்பினரும் மண்டல குழுத் தலைவருமான தி. மு. தனியரசு முன்னிலையில் நடைபெற்ற மருத்துவ முகாமை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் தொடங்கி வைத்தார் மேலும் மருத்துவ முகாமில் பங்கேற்றபொதுமக்களிடம் மழைக்கால நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் காய்ச்சலுக்கான மருந்துகளை மாத்திரை களையும் கொடுத்தார். கபசுரகுடிநீரை திமுகவினர் பருகினால் தான் மக்களும் பருகுவார்கள் என தானும் பருகினார் மேலும் ஏழை எளியமக்களுக்குநலதிட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் ஏராளமான மக்கள் மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

நிகழ்ச்சியில் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் அருள்தாஸ், மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி அவைத் தலைவர் ஆசைதம்பி, பகுதி துணைச் செயலாளர்கள் குமார், ஆர். எஸ், சம்பத், பொருளாளர் குமரேசன், வட்ட செயலாளர்கள் கேபிள் டிவி ராஜா, கார்த்திக், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# எண்ணூரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 4 குடும்பங்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் பணம் எம்எல்ஏ கே.பி.சங்கர் வழங்கினார்



சென்னை , நவ,6

சென்னை எண்ணூரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 4 குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் பணம் மற்றும் நலத்திட்ட உதவிகளை திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

சென்னை எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் ஆட்டோ ஓட்டுநர் லட்சுமணன் என்பவருக்கு சொந்தமான குடிசைகள் தீ பற்றி எரிந்தது காற்றின் வேகத்தினால் அடுத்தடுத்து மூன்று வீடுகளுக்கும் தீ பிடித்து எரிய தொங்கியது.

இதனால் வீட்டிலிருந்த பீரோ கட்டில் அனைத்து வீட்டு உபயோக பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாயின இதனையடுத்து திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே. பி. சங்கர் 3 வார்டு மாமன்ற உறுப்பினர் தம்பையா மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ரங்கராஜ் வட்டாச்சியர் அருள் உள்ளிட்டோர் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டனர்.

அரசு சார்பில் 5000 ரூபாய் பணமும் மற்றும் 5 கிலோ அரிசி, வேஷ்டி சேலை திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து தலா பத்தாயிரம் ரூபாய் பணம் 25 கிலோ அரிசி மூட்டை, போர்வை நலத்திட்ட உதவிகளை கே. பி சங்கர் வழங்கினார்.





▶ திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெம்பாக்கம் மேற்கு ஒன்றியம் வடமனப்பாக்கம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை மற்றும் 15.26 லட்சம் மதிப்பீட்டில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டிடத்தை செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஒ.ஜோதி திறந்து வைத்தார். மேலும் வெம்பாக்கம் மத்திய ஒன்றியம் வெம்பாக்கம் ஆதிதிராவிடர் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று புதிய பகுதி நேர நியாயவிலைக் கடையினை செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஒ.ஜோதி அப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் திறந்து வைத்து பயனாளிகளுக்கு பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் பார்வதி சீனிவாசன், வெம்பாக்கம் ஒன்றிய குழுத் தலைவர் மாமண்டூர் டி.ராஜி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் தெய்வமணி, வெம்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் சீனுவாசன், வெம்பாக்கம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் தினகரன், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சங்கர், செய்யாறு கிழக்கு ஒன்றிய செயலாளர் ஞானவேல், மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# செய்யூர் ஊராட்சியில் இந்தி திணிப்பை எதிர்த்து பஜார் வீதியில் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது



செய்யூர், நவ-06

தி.மு.க.தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் சட்டமன்ற உறுப்பினர் ஆலோசனைப்படி இலத்தூர்தெற்குஒன்றியம், செய்யூர் ஊராட்சி பஜார் வீதியில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ். பாபு தலைமையில் இந்தி திணைப்பை எதிர்த்து துண்டு பிரச்சாரம் வழங்கப்பட்டது.

இதில் இலத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் பா.சுபலட்சுமி பாபு எம்.ஏ,இலத்தூர் ஒன்றிய துணை பெருந்தலைவர் த.கிருஷ்ணவேணி தணிகாசலம்,முன்னாள் மாவட்ட துணைசெயலாளர் ஆர்.தசரதன்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜி.மோகனா கோபிநாத், ஆ.பர்வதம் வரதன்,வி. செல்வகுமார்,ஒன்றிய நிர்வாகிகள்,ம.மணி ப.பத்மநாபன்,க. அர்ஜுனன்,ஜெ மகாகணபதிராமன்எஸ். டில்லிபாபு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் தி.அருண்மொழிவர்மன், இலத்தூர் தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் செ.தென்னகசெல்வன், ஒன்றிய கலை இலக்கிய அணி அமைப்பாளர் எஸ். வி.மகேந்திரன்,மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் பி.சுரேஷ்,முன்னாள் மாவட்ட பிரதிநிதிகள் த.பாபு, மு தணிகாசலம்,முன்னாள் ஒன்றிய பொருளாளர் வெ.ரங்கநாதன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ரா.லோகாம்பிகை ராஜமாணிக்கம்,ஜெ.சுந்தரி ஜனார்த்தனன்,ரா. வேலாயுதம்,மு. திருநாவுக்கரசு, செ. ஆர்த்தி செல்வகுமார் செய்யூர் ஊராட்சி கிளைக்கழக செயலாளர்கள் என். ராசமாணிக்கம், இ.காளியப்பன்,ம. மணிவண்ணன்,நகார்த்திகேயன்,ராஜசேகர்,ராஜாராமன்,மஞ்சுளா நாகராஜ்,ரமேஷ் குமார் மற்றும் கழகத்தினர்,பொதுமக்கள் என திரளாக கலந்துகொண்டு இந்தி திணிப்பை எதிர்ப்பு தெரிவித்தனர்.

# புதுகையில் வைரம்ஸ் பள்ளியில் எக்ஸ்போ கண்காட்சி



புதுக்கோட்டை,நவ.6-

புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நேற்று வைரம்ஸ் எக்ஸ்போ நிகழ்ச்சி நடைபெற்றது, பள்ளியில் 50 அரங்குகள் அமைக்கப்பட்டு 667 மாதிரி வடிவமைக்கப்பட்டு 1,500 மாணவர்கள் பங்கேற்றனர்.

தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், சமூக அறிவியல், இந்தி, கணினி ஆகிய அனைத்துத் துறைகளிலும் மாணவர்கள் உற்சாகத்தோடு பங்கேற்று தங்களது திறமைகளை பல வடிவங்களில் வெளிப்படுத்தினர், மாணவர்கள் மாறுவேடங்கள் பல அணிந்து உரையாற்றினர், பல கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தமிழர்களின் பண்பாட்டு கலாச்சாரங்களும், மனித உறுப்புகளும் அதன் செயல்பாடுகளும் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பிரிவில் மாணவர்கள் பல மாதிரி வடிவங்களையும் வடிவமைத்து பார்வையாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

சிறப்பு விருந்தினராக திருவரங்குளம் மருத்துவ அலுவலர் விவேகா பங்கேற்று மாணவர்களின் திறமைகளை கண்டு வியந்து பாராட்டினர், தமிழ் துறைக்கு ஆசிரியர் மீனா, ஆங்கிலத் துறைக்கு பேராசிரியர் கணேசன், கணிதத் துறைக்கு ஆசிரியர் ராஜேஷ், அறிவியல் துறைக்கு மருத்துவர் விவேகா, ஆசிரியர்கள் மாதவி, செந்தில்குமார், கனகராஜ் மற்றும் ரமேஷ், சமூக அறிவியல் துறைக்கு மீனாட்சி சுந்தரம், மற்றும் சுப்ரமணியன், இந்தி துறைக்கு சிராஜுதீன் மற்றும் ஜெனிபர் பிரீடா ஆகியோர் நடுவர்களாக பங்கேற்று பரிசுகள் வழங்கினர். இவ்விழாவில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.








▶ புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஒன்றியம் ராஜேந்திரபுரத்தில் பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளை மத்திய அமைச்சர் (பஞ்சாயத்து ராஜ்) கபில் மோரேஸ்வர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி மற்றும் அதிகாரிகள்.

### குத்தாலம் அருகே ஸ்ரீகண்டபுரம் கடைவீதியில்

# இந்தி திணிப்பை எதிர்த்து திமுக சார்பில் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது



குத்தாலம்,நவ.06:-

இந்தி திணிப்பை எதிர்த்து தீர்மான விளக்கப்பொதுக்கூட்டம் மற்றும்துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்வு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, நவம்பர் 4-ம் தேதி மாநில முழுவதும் தொடங்கியது.

அதனை தொடர்ந்து நாகை வடக்கு மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகனின் அறிவுறுத்தலின் பேரில், மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் அருகே ஸ்ரீகண்டபுரம் கடைவீதியில் இந்தி திணிப்புக்கு எதிரான வாசகங்களான தேசிய அளவில் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கப்படும் நிலை உருவாகும், ஒன்றிய அரசின் அனைத்து திட்டங்களுக்கும் இந்தியில் மட்டுமே வரும், வரும் காலங்களில் கேந்திரிய வித்யாலயா பள்ளி முதல் ஐஐடி வரை இனி தமிழக மாணவர்கள் படிக்க முடியாத நிலை உருவாகும் என பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய துண்டு பிரசுரத்தை வணிகர்களுக்கும், பொதுமக்களுக்கும் குத்தாலம் திமுக மேற்கு ஒன்றிய சார்பில்,ஒன்றிய செயலாளர் ஆர். ராஜா தலைமையில் வழங்கப்பட்டது. அப்போது ஒன்றிய அவைத்தலைவர் சபீர்ரகுமான்,துணை செயலாளர்கள் முருகன்,வரதராஜன் ஒன்றிய கவுன்சிலர்கள் சிவஞானசுந்தரிபாலு,திவ்யாசரண்ராஜ் ,கிளைச் செயலாளர் ஹைத்துரூஸ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மதிவாணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கிளைச் செயலாளர்கள் உள்ளிட்ட திமுக மேற்கு ஒன்றிய பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் என 100-க்கும் மேற்பட்டோர் உடனிருந்தனர்.

# ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு மீது கல்வீசி தாக்குதல்



நந்தி கிராமம். நவ,6

ஆந்திர மாநில முன்னாள் முதல்வரும் தெலுங்கு தேச கட்சி தலைவருமான சந்திரபாபு நாயுடு என்.டி.ஆர்., மாவட்டம், நந்தி கிராமம் அடுத்த ஜக்கையா பேட்டை பகுதியில் ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியில் விலைவாசி உயர்வு குறித்து திறந்த வேனில் பிரசாரம் செய்தபடி சென்றார். அவருடன் சீனிவாஸ் எம்.பி., எம்.எல்.சி., சத்திய நாராயண ராஜு, முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் சவுமியா ஸ்ரீராம் தாத்தையா ஆகியோர் உடன் சென்றனர்.

அப்போது சந்திரபாபுநாயுடு மக்கள் மத்தியில் பேசியதாவது: ஆந்திராவில் ஜெகன் மோகன் ஆட்சியில் பெட்ரோல், டீசல், மளிகை பொருட்கள், மணல் உள்ளிட்டவைகளின் விலைவாசியை உயர்ந்து விட்டது. தற்போது ஆந்திர மாநில அரசு ரூ.8 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளதால் ஒவ்வொரு குடும்பத்தினர் மீதும் 1 லட்சம் கடன் உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

அப்போது அங்குள்ள வீட்டின் மாடியில் இருந்து சந்திரபாபு நாயுடுவின் மீது சரமாரியாக கற்கள் வீசப்பட்டது. இதைக் கண்ட அவரது பாதுகாவலர்கள் சந்திரபாபு நாயுடுவின் மீது கல் படாமல் தடுத்தனர். அப்போது மர்ம நபர்கள் வீசிய கற்கள் பாதுகாவலர் முகத்தில் பட்டு ரத்தம் கொட்டியது. கூட்டத்தில் இருந்த கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கல் வீசப்பட்ட வீட்டின் மாடிக்கு சென்று பார்த்தனர். அங்கு யாரும் இல்லை. கல்வீசிய மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பிச் ஓடி விட்டனர்.

இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து 7 தனிபடை அமைத்து சந்திரபாபு நாயுடு மீது கல் வீசி தாக்கியவர்களை தேடி வருகின்றனர்.

# கர்நாடகாவில் பயங்கர விபத்து 7 பெண்கள் நசுங்கி பலி



பெங்களூரு. நவ,6

கர்நாடகா மாநிலம் பிதார் பகுதியில் உள்ள சிட்டகுப்பா தாலுகாவில் உள்ள கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஆட்டோ மீது லாரி மோதி பயங்கர விபத்து ஏற்பட்டது. இதில் ஆட்டோ மற்றும் லாரியில் இருந்த 7 பெண்கள் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த கோர விபத்தில்மேலும் 11பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பிமலஹிடா என்ற பகுதியில் அரசுப் பள்ளி அருகே சென்றுகொண்டிருந்தபோது சாலையில் எதிரே வந்த லாரி ஆட்டோ மீது வேகமாக மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் ஆட்டோவில் பயணித்த பெமலகெடா இந்த கோர விபத்து ஏற்பட்டுள்ளது. எதிர்பாராமல் ஏற்பட்ட இவ்விபத்தில் பார்வதி (40), பிரபாவதி (36), குண்டம்மா (60), யாதம்மா (40), ஜக்கம்மா (34) ஈஸ்வரம்மா (55), ருக்மணி பாய் (60) ஆகியோர் உடல்நசுங்கி பரிதாபமாக பலியாகினர். படுகாயமடைந்த மற்ற 11 பேரும் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில், இருவர் கவலைக்கிடமாக உள்ளதாக போலீசார் தெரிவித்தனர். மேலும் விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வேலை முடிந்து விடு திரும்பியபோது விபத்தில் 7 பெண்கள் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வாரணாசியில் 'காசி– தமிழ் சங்கமம்' நிகழ்ச்சி நவ.16ல் துவக்கம்: மத்திய அமைச்சர் தகவல்



▶ வாரணாசியில் 'காசி-தமிழ் சங்கமம்' நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆய்வு செய்தார்.

வாரணாசி. நவ,6

தமிழகத்துக்கும், உத்தரபிரதேசத்துக்கும் குறிப்பாகவாரணாசிக்கும் இடையே நீண்டகால தொடர்பு உள்ளது. இந்த தொடர்பை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. இதற்காக வாரணாசியில் 'காசி-தமிழ் சங்கமம்' என்ற பெயரில் நடைபெறும் இந்த நிகழ்வுகள் வருகிற 16-ம்தேதி தொடங்குகின்றன. இந்த சங்கமத்தில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், கலாசார நிகழ்வுகள், கலை நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன.

இது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

வாரணாசிக்கும், தமிழகத்துக்கும் இடையேயான ஆழமான கல்வி, பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்துவதே காசி-தமிழ் சங்கமத்தின் நோக்கம் ஆகும். இந்நிகழ்ச்சியின் அறிவுசார் பங்குதாரர்களாக சென்னை ஐ.ஐ.டி. மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் செயல்படும். இந்நிகழ்ச்சிகளில் 2,500 பேர் பங்கேற்கின்றனர்.

அவர்கள் காசி விஸ்வநாத் தாம், பிரயாக்ராஜ் மற்றும் அயோத்திக்கும் செல்வார்கள். தமிழ் கலாசாரத்துக்கும், வாரணாசிக்கும் இடையிலான தொடர்பை மீண்டும் உறுதிப்படுத்தி கொண்டாடுகிறது. தமிழ்நாடு மற்றும் வாரணாசி இடையேயான பரந்த உறவின் நோக்கம் இரு அறிவு மற்றும் கலாசார மரபுகளை நெருக்கமாக கொண்டு வருவதும், நமது பகிரப்பட்ட பாரம்பரியம் பற்றிய புரிதலை உருவாக்குவதும் ஆகும். இவ்வாறு தர்மேந்திர பிரதான் கூறினார்.

# குளத்தூரில் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம்



**கந்தர்வகோட்டை, நவ.6–**

கந்தர்வகோட்டை ஒன்றியம் குளத்தூர் ஊராட்சியில் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 750 பேர் கலந்து கொண்டனர். கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துணவு தொகுப்பை வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம் குளத்தூர் நாயக்கர் பட்டியில் முன்னாள் முதல்வர் கலைஞரின் பெயரில் மருத்துவ முகாம் நடைபெற்றது, இந்நிகழ்ச்சிக்கு கந்தர்வகோட்டை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை தலைமை தாங்கி குத்துவிளக்கு ஏற்றிவைத்து நிகழ்ச்சியில் சிறப்பு உரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். முன்னதாக அனைவரையும் வரவேற்று குளத்தூர் நாயக்கர் பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ஜோதிராணி மகாலிங்கம் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில், கந்தர்வகோட்டை ஒன்றிய குழுத் தலைவர் ரெத்தினவேல் கார்த்திக் மழவராயர், அறந்தாங்கி சுகாதாரத்துறை துணை அதிகாரி கலைவாணி, சுகாதாரத்துறை ஆய்வாளர் முத்துக்குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஸ்டாலின், கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றிய தி.மு.க., செயலாளர் கோமாபுரம் தமிழ்ஐயா, ஒன்றிய குழு உறுப்பினர் வைரக்கண்ணு, அம்பிகாபதி, நாராயணசாமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராசாத்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவராக

# அமைச்சர் பொன்முடி மகன் போட்டியின்றி தேர்வு



சென்னை. நவ,6

தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடியின் மகன் அசோக் சிகாமணி தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் பதவிக்கு நெடுங்காலமாக தேர்தல் இல்லாமலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தது. சங்கத்தின் தலைவராக இருந்த இந்திய சிமெண்ட்ஸ் ஸ்ரீநிவாசனின் மகள் ரூபா தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனால் தலைவர் பதவிக்கு அமைச்சர் பொன்முடியின் மகன் அசோக் சிகாமணி மற்றும் பிரபு உள்ளிட்டோர் போட்டியிட்டனர். இந்த நிலையில் போட்டியில் இருந்த பிரபு அணியினர் அனைவரும் தங்களது மனுவை வாபஸ் பெற்றனர். இதையடுத்து போட்டியின்றி தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவராக அசோக் சிகாமணி தேர்தெடுக்கப் பட்டுள்ளார்.

மேலும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க செயலாளராக பழனியும், பொருளாளராக ஸ்ரீனிவாசராவும் போட்டியின்றியே தேர்வு செய்யப்பட்டனர். அசோக் சிகாமணி விழுப்புரம் மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளராகவும், தமிழ்நாடு கிரிக்கெட் சங்க துணைத்தலைவராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்பிரிக்க புளூ காய்ச்சல் கேரளாவில் 181 பன்றிகள் பலி



கோட்டயம். நவ,6

கேரளாவில் ஆப்பிரிக்க புளூ காய்ச்சல் காரணமாக மொத்தம் 181 பன்றிகள் பலியானது. இதையடுத்து நோய்வாய்ப்பட்ட விலங்குகளை கண்டறியும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டத்தில் ஏராளமான பன்றி பண்ணைகள் உள்ளன. இங்குள்ள பன்றிகள் சில நாட்களாக நோய்வாய்ப்பட்டு ஒவ்வொன்றாக பலியாகி வந்தது. இதையடுத்து கோட்டயம் மாவட்ட கால்நடை துறை அதிகாரிகள் இறந்த பன்றிகளின் மாதிரிகளை சேகரித்து பெங்களூருவில் உள்ள ஆய்வகத்துக்கு அனுப்பி வைத்தனர். அங்கு நடந்த சோதனையில் இறந்த பன்றிகளுக்கு, ஆப்பிரிக்க புளூ காய்ச்சல் பாதிப்பு இருப்பது தெரியவந்தது.

கோட்டயம் மாவட்டத்திற்கு உட்பட்ட ஆர்ப்புகரையில் 67 பன்றிகளும், மூலக்குளத்தில் 33 பன்றிகள் உள்பட மொத்தம் 181 பன்றிகள் பலியானது. அவற்றை கால்நடை மற்றும் சுகாதார துறை அதிகாரிகள் அழித்தனர். இதையடுத்து இந்த நோய் பாதிப்பு மற்ற பகுதிகளுக்கும் பரவாமல் இருக்க பன்றிகள் இறந்த பகுதியில் இருந்து ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள பன்றி பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குகளை கண்காணிக்கவும், நோய் பாதித்த விலங்குகளை உடனடியாக அப்புறப்படுத்தி அழிக்க முடிவு செய்தனர். இதற்கான நடவடிக்கையில் கோட்டயம் மாவட்ட நிர்வாகமும், சுகாதார துறையினரும் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

# ஆண்கள் மட்டும் வழிபடும் முனியப்பன் கோவில் கும்பாபிஷேகம்



சேலம் . நவ,6

சேலம் அருகே ஆண்கள் மட்டும் வழிபடும் அஞ்சலான்குட்டை முனியப்பன் கோவில் கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது.

சேலம் வாழப்பாடி, சேலம் மாவட்டம் வாழப்பாடியில் இருந்து 3 கி.மீ. தூரத்தில் கொட்டிப்பள்ளம் நீரோடை அருகே சிங்கிபுரம் ஊராட்சி பழனியாபுரம் காலனி எல்லை வனப்பகுதியில் 200 ஆண்டுகள் பழமையான அஞ்லான்குட்டை முனியப்பன் கோவில் உள்ளது. கற்சிலையான மூலவர் மட்டும் அல்லாமல் சடாமுனி, வால்முனி, செம்முனி ஆகிய ராட்சத உருவம் கொண்ட 3 முனியப்பன் சிலைகளும் கோவில் வளாகத்தில் கம்பீரமாக காட்சி அளிக்கின்றன.

இக்கோவிலுக்கு பெண்கள் செல்ல அனுமதிப்பதில்லை. கோவிலில் ஆண்களே பொங்கலிட்டு, ஆட்டுக்கிடா, கோழி பலியிட்டு, கறி சமைத்து சாமிக்கு படையல் வைத்து வழிபடும் வினோதம் இன்றளவும் தொடர்ந்து வருகிறது. இக்கோவிலில் திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது. யாகசாலை பூஜை, அபிஷேக ஆராதனைகளுக்கு பிறகு முனியப்பனுக்கு மலர் மாலை அலங்காரம் செய்யப்பட்டது. பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆண் பக்தர்கள் மட்டும் பங்கேற்று ஸ்வாமி தரிசனம் செய்தனர்.






# தமிழகத்தில் இனிமேல்தான் பருவமழையே தொடங்கவுள்ளது வெதர்மேன் அதிர்ச்சி தகவல்

சென்னை . நவ,6

நவம்பர் 9 ஆம் தேதிக்கு பிறகுதான் வடகிழக்கு பருவமழை தீவிரமாக இருக்கும் என 'தமிழ்நாடு வெதர்மேன்' என அழைக்கப்படும் பிரபல தனியார் வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கடந்த மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கி தீவிரமடைந்து வருகிறது. இதனால், தமிழகத்தில் ஆங்காங்கே மழை வெளுத்து வாங்கி வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் மழை தொடர்பாக வெதர்மேன் பிரதீப் ஜான் தனது கணிப்பை வெளியிட்டுள்ளார். அதில் தற்போது மேலடுக்கு சுழற்சி காரணமாக வடகிழக்குப் பருவமழை பெய்து வருகிறது. அதில் நவம்பர் 9-க்குப் பிறகு வடகிழக்குப் பருவமழை தீவிரம் இருக்கும் என தெரிவித்துள்ளார். மேலும், நவம்பர் 9-க்குப் பிறகு காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு உள்ளதாகவும், அது புயலாக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதனால் பொதுமக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

புதுகை வரலாறு நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை

காலிப் பணிஇடங்கள் 2

PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN

தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள் சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்

மேலும் தொடர்புக்கு :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534

புதுகை வரலாறு நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய
செய்தியாளர்கள் தேவை

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகாக்கள் வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை.

தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்.

தாபால் அனுப்பவேண்டிய முகவரி :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# ஆர்.எஸ்.எஸ். பேரணி கோர்ட் நிபந்தனைகள் நிராகரிப்பு

# புதுகையில் மாடர்ன் ரைஸ் மில் பொதுமக்கள் கடும் அவதி





# தமிழக கிரிக்கெட் சங்க தலைவர் அமைச்சர் மகன் தேர்வு


சென்னை / புதுக்கோட்டை | 06.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

06.11.2022 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

டி. ஆர். மகாலிங்கம் , புல்லாங்குழல் கலைஞர் (பி.1926) (இ.1986)



யஷ்வந்த் சின்கா , இந்திய அரசியல்வாதி (பி.1937)



சூலமங்கலம் ராஜலட்சுமி , கருநாடக இசைப் பாடகி (பி.1940) (இ.1992)



## இன்றைய நினைவு நாள்

ஜார்ஜ் கார்டன் மீடு , அமெரிக்கத் தரைப்படை அதிகாரி (பி.1815) (இ.1872)



சஞ்சீவ் குமார் , இந்திய நடிகர் (பி.1938) (இ.1985)



**போர் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழலை சுரண்டுவதைத் தடுப்பதற்கான பன்னாட்டு நாள்**